REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 8 விலை ரூபா 5 15 ஆனி 1999

### சந்தாதாரர் கவனத்திற்கு

1999 ஆம் ஆண்டிற்கான உங்கள் சந்தா புதுப்பிக்கப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். பாது காவலன் விற்பனையாளர் களே! உங்கள் நிலுவை களை ஒழுங்காகச் செலுத்தி, எங்களுக்கு உதவுங்கள்.

(ஆ-ர்)

## பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் கண்கவர் யூபிலிக் கண்காட்சி

மாபெரும் யூபிலி ஆண்டினையொட்டி, யாழ் மறைமாவட்ட யூபிலி ஆணைக்குழுவி னரால் பருத்தித்துறை மறைக்கோட்ட மக்களுக்காக 08 - 05 - 99 இல் நடத்தப் பட்ட யூபிலிக் கண்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு பி. எம். இம்மானு வல் அடிகளார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு செல்வராஜா அடிக ளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆயரின் ஆசிச் செய்தியை வழங்கி கண்காட்சியைத் திறந்து வைத்தார். அருட்திரு. ஜீவா போல் அ.ம.தி.யின் ஆசியுரை யுடன் தொடங்கிய இந்த ஆரம்ப நிகழ்வில் யூபிலி ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு நீக்கிலஸ் அடிக ளும், அருட்திரு யூஜின் பிரான்சிஸ், அருட்திரு யேசு ரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஓவியக் கண்காட்சி மண்டப வாயிலில் அமைந் திருந்த புனித பேதுரு பேரால யத்தின் வடிவமும், யூபிலி ஆண்டுச் செய்தியை விடுக் கும் திருத்தந்தையின் குர லொலியும் நெஞ்சை விட்ட கலா நிகழ்வாய் மிளிர்ந்தன.

யாழ் ஆயரின் செய்தி தொலைக்காட்சியில் ஒளிபரப் பப்பட்டமையும், கொம்பு வாத் தியத்தின் மூலம் யூபிலி யாண்டு அறிவிக்கப்பட்டமை யும் உள்ளத்தைக் கவரும் அம்சங்களாகும்.

உலகப்படைப்பு முதல் இன்றைய திருச்சபை வரை யுள்ள வரலாற்று நிகழ்வுக ளும், யூபிலி ஆண்டும் அதற் கான ஆயத்தமும்; அன்பிய அமைப்பு முறை போன்றன வும் ஓவியங்களாகவும்,மாதிரி உருவங்களாகவும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன.

இக் கண்காட்சியுடன் பொம்மலாட்டம், தொலைக் காட்சி நிகழ்வுகள், நாடகம், தெருக்கூத்து, இசை போன்ற கலை நிகழ்வுகளும் இணைந் திருந்தன.

நிறைவாக யூபிலி 2000 விடுக்கும் சவாலையும் இக்கண்காட்சி விளம்பிநின்றது.

தகவல்:

திரு. சி. வின்சென்ற் (கரவெட்டி நிரூபர்)

## ஒட்டகப்புல அமலோற்பவ அன்னை ஆலய விழா

ஒட்டகப்புலத்தின் பாதுகாவலியான அமலோற்பவ அன்னையின் ஆலயத்தில் கடந்த வைகாசி 31ம் திகதி விழாத் திருப் பலி காலை 10.30 மணியளவில் பங்குத் தந்தை அருள்திரு ஜேம்ஸ் அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து இருக்கும் ஒட்டகப்புல அமலோற்பவ அன்னை ஆலய, யாகப்பர் ஆலய பங்கு மக்கள் வழமைபோல இராணுவ அனுமதி பெற்று ஒட்டகப்புலம் சென்று அச்சுவேலிப் பங்கு மக்களுடன் இணைந்து இவ்விழாவைச் சிறப் பித்தனர்.

பிரச்சனையான இச்சூழலிலும் விழா வில் மக்கள் வெள்ளம் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தகவல் –T. ஜெயா

## புதுயுக பூக்கள் வெளியீட்டு விழா

யாழ் மறைமாவட்ட 2000ம் ஆண்டு யூபிலி ஆணைக்குழுவி னரின் வழிகாட்டலில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியினர் தயாரித்து வழங்கிய "புதுயுக பூக்கள்" ஒலிப்பதிவு இசைநாடா வெளியீட்டு விழா கடந்த 26ம் திகதி புதன்கிழமை மாலை 5.15 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்றத்தில் நடைபெற்றது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர் கள் ஒலிப்பதிவு இசை நாடாவின் ஊடாகவும் மக்களின் ஆன்மீக பசியைப் போக்கலாம் எனக் கூறி, யூபிலி ஆண்டை நோக்கிய உள் ளார்ந்த ஆன்மீக ஆயத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். இவ் விழா வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் அமலமரித் தியாகிகளின் புதிய மாகாணத் தலைவர் அருட்திரு ஜீவேந்திரா போல் அடிகள் இசைநாடாவில் அடங்கியிருந்த அனைத்து பாடல்களுக்கும் தனது ஆய்வுக் கருத்தை வழங்கினார்.

இவ் விழாவினை தலைமை தாங்கி நடத்திய யூபிலி 2000ஆம் ஆண்டு ஆணைக்குழுத் தலைவரும், உயர் குருமட அதிப ருமாகிய அருட்திரு ஜேக்கப் நீக்கிலஸ் அடிகள் முதல் பிரதியை யாழ் ஆயரிடம் வழங்க தொடர்ந்து ஆயர் ஏனைய பிரதிகளை அங்கிருந்த பிரமுகர்களுக்கு வெளியிட்டு வைத்தார். இவ் விழாவின் இறுதி நிகழ்வாக ஒலிப்பதிவு இசை நாடாவிலிருந்து பாடல்கள் இன்னிசை கானங்களாக வழங்கப்பட்டன.

தகவல்: அருட்சகோ. எஸ். ஏ. றொகஜான்.

## இரு கன்னியர்களின் மறைவு

திருக்குடும்ப சபையைச் சேர்ந்த இரு கன்னியர்கள் அண்மையிற் காலமா யினர். இவர்கள் பேசாலையைச் சேர்ந்த அருட்செல்வி வலேரியன் ரெவ்வலும், நாரந்தனையைச் சேர்ந்த அருட்செல்வி மேரி பப்ரிஸ்ற் சந்தியாப்பிள்ளையுமாவர்.

அருட்செல்வி வலேரியனின் இறுதிச் சடங்குகள் 5ம் திகதி கொழும்பில் நடை பெற்றன. அருட்செல்வி பப்ரிஸ்ற்றின் இறு திச் சடங்குகள் 12ம் திகதி யாழ்ப்பாணத் தில் இடம்பெற்றன.

## மனச்சாட்சியின் விளக்கை ஏற்றி இறைசித்தத்தை ஏற்ற நீதிமான்

- அருட்திரு ஜீவா போல் அ. ம. தி.

"தொழிலாளரின் பாதுகாவலரான புனித சூசையப்பர் பெருவிழாவானது புனிதரில் மிளிர்ந்த பண்பு களை எம்மில் வளர்க்கத் தூண்டுகிறது. புனித சூசையப்பர் வாழ்வின் அனுதின சவால்களை ஏற்று சோதனைகளை வென்று இறைவனின் அழைப்பை பூரணப்படுத்திய நீதிமான். மனச்சாட்சியின் குரலுக்கு செவிசாய்த்து மனச்சாட்சியின் விளக்கை ஏற்றிய புனிதரைப் பின்சென்று ஆண்டவரின் அழைப்பை நிறைவு செய்து வாழுங்கள்"

மேற்கண்டவாறு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் 01. 05. 99 அன்று நடைபெற்ற புனிதரின் விழாவின் போது தலைமையேற்று திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்திரு ஜீவா போல் அடிகளார் தமது மறையுரையில் எடுத்துரைத்தார்.

பல குருக்களின் வழிநடத்துதலில் நவநாள் ஆராதனைகள் நடந்து, இறுதியில் விழா சிறப்பாக நடைபெற்றது.

தகவல்

S. G. ரூபவசந்தினி (கோப்பாய் நிரூபர்)

## க. பொ. த. உயர்தர பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு

யாழ் மரியன்னை பேராலய இளை ஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் உயர் தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக் கென நடாத்தப்படும் கிறிஸ்தவ பாட வழி காட்டல் கருத்தரங்கு இம்முறை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

வரும் யூலை மாதம் 2ம், 3ம், 4ம் திகதிகளில் புனித பத்திரிசியார் கல்லூரி சிமித் மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக் கருத்தரங்கில் அலகு ரீதியான பாடவிளக்கங் களும், வினாவிற்கு விடையளிக்கும் முறை பற்றியும் விளக்கமளிக்கப்படும்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும் பும் மாணவர்கள் தங்கள் பங்குத் தந்தையூ டாகவோ, யாழ் மரியன்னை பேராலய பணி மனையிலோ தொடர்பு கொண்டு தங்கள் பெயர் விபரங்களை பதிவு செய்துகொள்ளும் படி கேட்கப்படுகின்றனர். (N-02)

## தூய ஆவியானவரின் வருகைக்கான திருவிழிப்பு

கடந்த மே 22ம் திகதி, புனித மடுத்தீனார் குருமடத்தில் தூய ஆவியானவரின் வருகைக்கான திருவிழிப்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல குருக்கள், கன்னியர், குரு மாணவர், பொதுநிலையி னர் கலந்துகொண்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் அணி திரண்டு வந்திருந்தது அவர்களது ஆன்மீக விழிப்புணர்ச்சியைக் காட்டக்கூடியதாயிருந்தது.

ஆயர் அவர்களின் தலைமையில் இரவு 8 மணிக்கு ஆரம்பித்த வழிபாடுகள் காலை 5 மணிக்கு திருப்பலியுடன் நிறைவுபெற்றன. செபத்தில் ஒன்றுகூடியிருந்த மக்களை அருட்தந்தை ரவிச்சந் திரன், அருட்தந்தை ஜெயசீலன், அருட்தந்தை சகா யநாயகம், அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், அருட்தந்தை சாள்ஸ், அருட்தந்தை டேவிட், அருட் தந்தை பொணிபஸ், அருட்தந்தை மத்தாயஸ் ஆகி யோர் செபத்திலும் சிந்தனையிலும் வழிநடத்தினர்.

குறைபாடு உள்ளவர்களிடம் இயேசு எப்படிச் செயற்பட்டார் என்பதை உணர்த்த அங்கவீனர் செபிக்க அழைக்கப்பட்டு, அவர்கள் தமது சாட்சியத் தைப் பகிர்ந்து கொண்டமை உள்ளத்தைத் தொடும் அனுபவமாக இருந்தது. இவ்வழிபாடு மக்கள் அனை வருக்கும் ஒரு புதிய ஆன்மீக அனுபவமாக விளங் கியது.

தகவல்: திருமதி பியாட்றிஸ்

## நுவரேலியாவில் திருப்பாடுகளின் காட்சி

நுவரேலியா புனித சவேரியார் ஆலயத்தில் இவ்வாண்டு முதன்முறையாக திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டது. பெரிய வெள்ளிக் கிழமை வாசகத்தை கண்கூடாகக் காணும்படி நற் செய்தி வாசகப் பின்னணியில் இக்காட்சிகள் இதற் கென ஆலயத்தின் முன் அமைக்கப்பட்ட ஒரு மேடை யில் நடித்துக் காட்டப்பட்டன. பல மதத்தவரும் இதனை பக்தியுடன் பார்வையிட்டனர். வாசகங்கள் சிங்களத்தில் இடம்பெற்றன. குருத்தோலை ஞாயி றன்று யேசுவின் பவனி, பாடுகள், மரணம் ஆகியன தமிழில் நடிக்கப்பட்டன. தேயிலைத் தோட்ட இளை ஞர்கள் இதிற் பங்குகொண்டனர். திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி நிர்மலா முருகேசு இதற்குப் பொறுப்பாக இருந்தார்.

இவ்வாலயத்தின் 150 ஆண்டு காலவரலாற் றில் இத்தகைய காட்சிகள் இடம்பெற்றது இதுவே முதற் தடவையாகும்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும் (தி. ப. 127. 1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### ஒரு சிறந்த ஆயத்தம்

மாபெரும் யூபிலிக்கு ஆயத்தம் செய்யும் இந்த இறுதி ஆண்டிலே தந்தையின் இல்லம் நோக்கி ஓர் ஆன்மீக பயணத்தை மேற்கொள்ளுமாறு அனைவரும் அழைக்கப் படுகின்றனர். இந்தப் பயணத்தின் முக்கிய அம்சம் உண்மையான உள மாற்றம் பெற்று, தாம் இது வரை கடைப்பிடித்து வந்த தீயவழிகளை விட்டு, நன்மையை நோக்கி ஒரு புதிய பாதையில் காலடி எடுத்து வைப்பதாகும்.

எமது மறை மாவட்டத்தில் பங்குதோறும் நடந்து வரும் மகா ஞானொடுக்கங்கள் பல விதங்களில் யூபிலி விழாவிற்கு ஒரு தக்க ஆயத்தமாக அமைந்துள்ளன. மக்களிடம் உளமாற்றத்தை மட்டுமல்லாமல் ஒரு விழிப்புணர்ச்சியையும் அவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. ஏனையஞானொடுக்கங்களைப் போலல்லாமல் ஆழமாகச் சென்று, மக்கள் பிரச்சனைகள் கணிப்பில் எடுக்கப்பட்டு அதற்கேற்ற அணுகுமுறைகள் கையாளப்படுவதாலும்,மக்கள் பங்களிப்பும் பெறப்படுவதாலும், வாடிக்கையாக ஆலயத்துக்கு வருவோர் மட்டுமல்லாது பங்கு முழுவதும் இதில் ஈடுபடுத்தப்படுகிறது. ஆயத்தநிலையிலும் ஞானொடுக்கத்தின் போதும் அதற்குப் பின்னருங்கூட பொதுமக்களைப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்துவது, அவர்கள் தமது கிறிஸ்தவ அழைப்பை உணரக்கூடியதான ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தும்.

பொது நிலையினரின் ஆன்மீகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். ஆன்மீகமென்பது குருக்கள், கன்னியருக்கு மட்டுமல்ல பொது நிலையினருக்கும் உரியது என்பதையும் அது தனித் தன்மை வாய்ந்தது என்பதையும் உணர்த்த இது ஒரு நல்ல சமயமாகும். பக்தி முயற்சிகளைக் கடைப்பிடிப்பதும், சட்ட திட்டங்களுக்கு அமைவதும் தம்மைப் பக்திமான்கள் ஆக்குகின்றது என அனேகர் கருதுகின்றனர்.

நற்செய்தியைப் படிப்பவர்கள் கிறிஸ்து வந்த நோக்கத்தையும் அவரது செய்தியையும் ஆழமாக உணர்ந்தால், அவர் தமது சீடர்களிடம் ஒப்படைத்த பணி எத்தகையது, அது ஒரு சிலருக்கல்ல அனைவருக்கும் உரியது என்பதை அறிந்து இறையரசைக் கட்டியெழுப்புவதில் புதிய அர்ப்பணத்துடன் செயற்பட ஏதுவாகும். தமது சமூகச் சூழலில் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டி சமூகத்தில் புளிக்காரமாக விளங்கவும் இது துணைபுரியும்.

இவ்விதமாக பிதாவிடம் செல்வதற்கு வழி சமைக்க இந்த மகா ஞானொடுக்கம் பேருதவியாக அமையும். மேலும் எமது பிரதேசத்தில் இது பொருத்தமானதும், சாத்தியமானதுமான ஓர் ஆயத்தமாகவும் உள்ளது.

# 2000 யூபிலிக்கான மகா ஞானொடுக்கம்

எமது மீட்பரது பிறப்பின் மூன்றாவது சகாப்தத்தின் வாயிலில் நிற்கும் எமக்கு, திருச்சபையானது இது ஓர் ஒப்புரவின் ஆண்டு, தந்தையிடம் திரும்பிவரும் ஆண்டு என அறிவுறுத்தியுள்ளது. யூபிலி ஆண்டை தக்க விதத்தில் கொண்டாடுவதற்கு இது ஓர் உடனடியான ஆயத்தமாகும். ஏனெனில் யேசு மனிதனாகப் பிறந்தது, தமது பாடுகளினாலும் மரணத்தினாலும் வீழ்ந்து போன மனுக்குலத்தை பிதாவிடம் திரும்பவும் சேர்ப்பதற்கேயாகும். தந்தையானவர் கிறிஸ்துவின் மரணத்தை ஒப்புரவாக ஏற்று உயிர்ப்பு என்னும் மகிமையை அவருக்கு அளித்தார். யூபிலி ஆண்டானது உலகப் பாங்கில் அலலாது சமய மரபின்படி அர்த்தமுள்ளதாக அமையவேண்டுமானால், எமது மறைமாவட்டத்தில் மக்களின் ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்க ஒரு மகா ஞானொடுக்கம் போதிக்கப்படுவது பொருத்தமானதேயாகும். இது ஒரு முக்கிய பணியாக இருப்பதால் இது வெற்றிகரமாக அமைவதற்கு மறைமாவட்டத்திலுள்ள அனைத்து மக்களினதும் ஈடுபாடு அவசியமாகும்.

## மகா ஞானொடுக்கத்தின் செயற்பாடுகள்

முழுப்பலன் அளிப்பதற்கேற்ற வண்ணம் அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இது நான்கு படி நிலைகளைக் கொண்டது.
1) நெடுங்கால ஆயத்தம் 2) ஞானொடுக்கத்துக்கு முந்திய அறிவிப்பு 3) ஞானொடுக்கம் 4) தொடர் செயல் திட்டம்

### படிநிலை 1: நெடுங்கால ஆயத்தம்

இந்த ஞானொடுக்கத்தின் நோக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும், அதன் உட்பொருளையும் பொருத்தப்பாட்டையும் பற்றி மக்களுக்கு விளக்கி அவர்களது உள்ளங்களுக்கு உணர்வூட்டுவது அவசியமாகும். ஞான ஒடுக்கத்துக்கான காலம் குறிக்கப்பட்ட உடனே சம்மந்தப்பட்ட அனைவரும் இயங்கத் தொடங்கவேண்டும். இதில் போதகர்களே முக்கிய பங்கு வகித்தாலும் மறைக்கல்வி நிலையம், மனித முன்னேற்ற நிலையம், குடும்பசேவை நிலையம் போன்ற மறைமாவட்டத்திலுள்ள பல்வேறு வாய்ப்பு வளங்களும் இதற்குப் பயன்படுத்தப்படுதல் நன்று பொது நிலைத் தலைவர்களும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களும் இதற்குத்துணை புரிபவராக இருக்கலாம். துறவறக் கன்னியரின் பங்களிப்பையும் நாம் மறந்துவிடல் ஆகாது. பங்குத் தந்தை ஞான ஒடுக்கத்தின் நோக்கத்தை விளக்கி உரிய காலத்தில் அதுபற்றி அறிவிப்பார். பங்கிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் இச்செய்தி எட்டவேண்டும். தேவையான விடயங்கள் மட்டும் அடங்கியுள்ள, சுருக்கமான ஒரு வினாக்கொத்து பங்கு மக்களின் தேவைகள், ஏக்கங்கள், மனக்குறை வினை நாடி பிடித்தறிய பெரிதும் துணைபுரியும்.

### படிநிலை 2: ஞானொடுக்கத்தின் முன்னறிவிப்பு

பங்குத் தந்தை பங்கு மக்களுக்கு ஞானொடுக்கம் பற்றி அறிவித்தவுடன், ஞானொடுக்கத்துக்கு ஆயத்த போதனை ஆரம்பமாகும். இவ் வேளையில் கிறிஸ்து பிறப்பின் 2000 வது ஆண்டு நிறைவுக்கு இந்த ஞானொடுக்கம் ஓர் ஆயத்தம் ஆகும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இறைமகனின் மனித அவதாரம் வரலாற்றின் ஈடிணையற்ற ஒரு நிகழ்ச்சியாகும். அது உலகத்தை மாற்றியமைத்த, இன்னும் மாற்றியமைத்துக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியென்பது மக்கள் மனதில் ஆழமாகப் பதிய வைக்கப்பட வேண்டும். இது புதுப்பித்தலுக்கும் ஒப்புரவாதலுக்கும் எமக்குத் தரப்பட்ட அருளின் காலமாகும். இது எம் வாழ்நாளில் கிடைக்கும் ஒரே சந்தர்ப்பமாக இருக்கலாம். எமது கிறிஸ்தவ அழைப்பை மீண்டும் சிந்திக்கவும், ஆர்வத்துடன் செபிக்கவும், எமது கிறிஸ்தவ நோக்கைத் தெளிவுபடுத்தி, தெளிந்த நோக்குடன், இறையருள் துணை புரிய வருங்காலத்தை விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும், துணிவுடனும் எதிர் கொள்ளமுடியும்.

போதகர்கள் குழு வீடுகளைத் தரிசிப்பது ஞானொடுக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். இதனால் பங்கில் என்ன நிகழ்கிறது என்பது பற்றி ஒரு விழிப்புணர்வு ஏற்படும். நாம் ஒரு சமுதாயமாக ஞானொடுக்கத்தில் பங்கு கொள்கிறோம் என்ற உணர்வு உண்டாகும். காணாமல் போன ஆடுகள் மீட்கப்படுகின்றன. பிரிந்த குடும்பங்கள் ஒற்றுமையாக்கப்படுகின்றன, விவாகங்களைச் சீர்ப்படுத்த ஆயத்தங்கள் செய்யப் படுகின்றன. ஆலயத்துக்கு வராத மக்களுடன் தொடர்புகொண்டு, ஞானொடுக்க நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அறிவுறுத்தப்படுகிறது. பங்கிலுள்ள எல்லா மக்களும் இயங்க வைக்கப்ப்டுகின்றனர்.

இறைவன் மனித உள்ளங்களில் தமது அருட்செயல்களை ஆற்ற வேண்டுமானால் அதற்கு செபம் மிக அவசியமாகும். இந்த ஞானொடுக்கத்திலிருந்து சிறந்த பலன்களைப் பெற்றுக் கொள்ளும் படிக்கு, மக்கள் பெருந்தன்மையுடன் தம்மாலியன்றளவு மதுபானங்களைத் தவிர்க்கவும், பொழுது போக்குகளைக் குறைக்கவும், ஒறுத்தல் உபவாசம் செய்யவும் அறிவுறுத்தப்படுகின்றனர். குழுச்செபக் கூட்டங்கள், கூட்டுச் செபமாலைகள், சிலுவைப் பாதைகள் போன்றவைகளை ஊக்குவிப்பதன் மூலம் செப தபச் சூழ்நிலை உண்டாக்கப்படுகிறது. இது பங்கில் ஏதோ ஒரு பெரும் ஆன்மீக நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறதென்பதை மக்கள் உணரச்செய்து, தம் மீதும் தம் பங்கின் மீதும் இறையருளை ஏராளமாக பெற்றுக்கொள்ள வழிசெய்யும்.

கருத்துக் கணிப்பு, பொதுக் கூட்டங்கள் போன்றவைகளையும், திரு வழிபாடு, பிரசாரம், கலைநிகழ்ச்சிகள், ஞானொடுக்க செலவை ஈடுசெய்ய நிதி சேகரித்தல் போன்ற வேலைகளையும் பல்வேறு குழுக்களிடமும் பொதுநிலைத் தலைவர்களிடமும் ஒப்படைக்கலாம்.

மக்களின் தேவைகள், உரையாற்றவும் பட்டறைகளை நடத்தவும் கிடைக்கக் கூடிய ஆள்வளம், ஞானொடுக்கம் நடக்குமிடத்துக்கு மக்கள் வரக்கூடிய வசதி, கருத்தரங்குகளுக்குப் பொருத்தமான நேரம் போன்றவற்றைக் கருத்திற் கொண்டே நிகழ்ச்சித் திட்டம் வகுக்கப்படும்.

### படிநிலை 3: ஞானொடுக்கம்

**ஆரம்ப தினம்** : வேதாகமம் பவனியாக எடுத்துச் செல்லப்படும். பங்குத் தந்தையின் வரவேற்புரையின் பின் போதகரின் ஆரம்பவுரை நிகழ்த்தப்படும். முக்கிய அறிவித்தல்கள் கொடுக்கப்படும்.

**திருவழிபாடு** : சிறுவர் தினம், வேதாகம தினம், நற்கருணைதினம், நோயாளர்தினம் போன்ற பல்வேறு தினங்கள் அனுசரிக்கப் படும். திருவழிபாட்டில், குறிப்பாக செபங்களிலும் பாடல்களிலும் ஆர்வத்துடன் பங்கு பற்றுவதற்கு மக்களைப் பயிற்ற இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். ஞானொடுக்கத்தின் போது பல்வேறு கருத்துக்களுக்காக ஒதுக்கக் கூடிய சில தினங்களாவன : இளைஞர் தினம், தொழிலாளர் தினம், குணமாக் கல் தினம், பரிகார தினம், தேவ அழைத்தல் தினம், பெற்றோர் தினம், அன்னையர், தந்தையர் தினங்கள், தேவ தாயின் தினம் முதலியன.

ஒரே வகையைச் சேர்ந்தவர்களின் குழுக்களுக்கு (விவாகமான தம்பதிகள், பெற்றோர், A/L மாணவர்கள்) கருத்தரங்குகள், பட்டறைகள் நடத்துவது அக்குழுவைச் சேர்ந்தவர்கள் திறந்த மனத்தோடு மனமார உரையாடி, தமது குழுவைச் சர்ந்த விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கும்.

**ஒப்புரவாக்கல்** : இறைவன் மட்டுமே ஒருவரை மனந்திருப்ப முடியும். ஆனால் அது நடைபெறுவதற்கு போதகர்கள் எல்லா முயற்சிகளும் செய்வார்கள். தரிசனைகள், உரையாடல்கள், தியான ங்கள், செபங்கள் மூலம், பிறரின் உதவியோடு முறிந்த உறவுகளையும் நொந்த உள்ளங்களையும் சீர்ப் படுத்தி, மக்களிடையே பாலங்களை உருவாக்க துணைபுரிவார்கள்.

**பொதுநிலையினர் தலைமைத்துவம்**

பொதுநிலையினர் பொறுப்புக்களை ஏற்க ஊக்குவிக்கப்பட வேண்டும். பொது நிலையினரின் வாழ்க்கை நிலைக்கேற்ற ஓர் உண்மையான ஆன்மீகம் தோற்றுவிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ பரிசுத்த தனம் என்பது குருக்களுக்கும் துறவிகளுக்கும் மட்டுமல்ல, கிறிஸ்தவ அழைப்புப் பெற்ற ஒவ்வொருவருக்கும் உரியது என்பது உணர்த்தப்படவேண்டும். பரிசுத்த தன த்தை அடைவதற்கு வாழ்க்கை விதிகளாக அமையக் கூடிய சில குறிப்புக்களை வழங்கலாம். அடுத்துவரும் சகாப்தத்தில் திருச்சபையானது பொது நிலையினர் தனிச் சிறப்பு வாய்ந்த பங்கினை வகிக்கும் ஒரு சபையாக விளங்கப் போகின்றது. இது நிகழ வேண்டுமானால், ஒரு உறுதியான பொது நிலையினரின் ஆன்மீகம் இன்று தேவையாகின்றது.

**இறுதி நாள்** : நற்கருணை வழிபாட்டுடன் ஞானொடுக்கம் முடிவடையும். காணிக்கைப் ப்வனியின் போது வாக்குத் தத்தங்களும் பிரதிக்கினைகளும் செய்யப்படுவதால் மக்கள் மெழுகுதிரிகள் கொண்டு வருவார்கள். வழிபாட்டின் முடிவில் திருத்தந்தையின் ஆசீர் வழங்கப்படும். உணவுப் பொருட்கள் பரிமாறப்பட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து உணவு அருந்துவது ஒரு சிறந்த இறுதி நிகழ்ச்சியாகும். இது அவர்களது ஒருமைப்பாட்டையும் பொது நோக்கத்தையும் எடுத்துக்காட்டும். முக்கிய நிகழ்ச்சிகளை அல்லது ஞானொடுக்கத்தின் போது கையாளப்பட்ட கருத்துக்களைப் பற்றிய கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படலாம். இவற்றில் மக்களின், குறிப்பாக இளைஞர்களின் மறைந்து கிடக்கும் திறமைகள் வெளிக் கொணரப்பட்டு பயன்படுத்தப்படலாம்.

### படிநிலை 4 : தொடர் செயல் திட்டம்

பங்கில் ஞானொடுக்கம் முடிந்ததும் புதுப்பித்தல் ஆரம்பமாகின்றது. இறைவன் விதையை விதைத்து விட்டார். மக்கள் விசுவாசத்திலும் புதுப்பித்தலிலும், தொடர்ந்து வளர்ச்சியடைவது போதகர்களுடன் பங்குத் தந்தையரிலும் பங்கு மக்களிலும் தங்கியுள்ளது. தொடர் செயற்பாடுகளான கருத்தரங்குகள், அமர்வுகளின் போதுதான் நடைமுறைக்குரிய முக்கிய விடயங்களை ஆராய்ந்து விரிவுபடுத்தலாம். சமுதாயத்தின் தேவைகளையும், சமுதாயத்துக்கு தமது பங்களிப்பையும் தமது ஈடுபாட்டையும் பற்றி மக்கள் ஆழமாகச் சிந்திக்கும்படி செய்யலாம். குடும்ப இயக்கங்கள், பொதுநிலையினர் இயக்கங்கள், இளைஞர், சிறுவர் போன்றோருக்கு பங்கிற்கு வெளியே தங்கியிருந்து பங்குபற்றும் தொடர் அமர்வுகள் ஏற்பாடு செய்யப்படலாம். ஞானொடுக்கத்தினால் ஓரளவுக்கு தடைகள் தகர்க்கப்பட்டு, ஒருமைப்பாடும் சமூக உணர்வும் வளர்க்கப் பட்டுள்ளன. கிறிஸ்தவ[illegible] மதிப்பீடுகளைக் கொண்ட ஒரு நல்ல [illegible]கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இது ஒ[illegible] நல்ல அத்திவாரமாகும். சமூகத்தின் புளிக்காரம் கிறிஸ்தவர்களே. மாற்றத்தைக் கொண்டு வருவதில் இறைவனது வார்த்தை மிகவும் ஆற்றலுள்ளது. தம் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கு தமது விருப்பத்தைச் செயற்படுத்தி, எதற்காக தாம் அதை அனுப்பினாரோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் தம்மிடம் திரும்பி வருவதில்லை என்று இறைவனே கூறியுள்ளார் (ஏசாயா 55 : 11).

தமது அரசைக் கட்டியெழுப்புபவர் இறைவனே. நாம் அவரது கையில் வெறும் கருவிகளே. குருக்கள், இறைவாக்கினர், அரசர் உட்பட அனைவரும் இந்த வேலையில் ஈடுபட்டுள்ளனர்

இறைவன் ஒருவருக்கே மகிமை!

*அருட்திரு எஸ். இ. விஜயரட்ணம் அ. ம. தி. அவர்களது கட்டுரையின் தமிழாக்கம்.*

## அருட்தந்தை அகஸ்தீனுக்கு பிரியாவிடை

இ. அ. அமலரட்ணம்

யாழ். புனித மரியாள் பேராலயத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக உதவிப்பங்குத் தந்தையாகப் பணியாற்றிய அருட்திரு அகஸ்தீன் அடிகள் இடமாற்றம் பெற்றுச் செல்வதால் அவருக்கு 16.05.99 அன்று பேராலய மக்களால் பிரியாவிடை வைபவமொன்று நடத்தப் பட்டது. அடிகளின் நன்றித்திருப்பலியின் பின் பங்குத்தந்தை அருட்திரு A.C. கிறிஸ்தோபர் அடிகளின் வாழ்த்துரையும், மேய்ப்புப் பணிச் சபைச் செயலாளர் அ.க.ஏணெஸ்ற் அவர்களின் பாராட்டுரையும் இடம் பெற்றன. பங்கு மக்கள் சார்பில் அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ

## உலகில் நடப்பவை சில...

தொகுப்பு : பீ. நியூட்டன்

### சிறுவர்களுக்கான விவிலியப் பிரதி

ஜேர்மனியைச் சேர்ந்த "எயிட் டு த சேர்ச் இன் நீட்" என்னும் அமைப்பு பின்தங்கிய நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கென 1979இல் இருந்து "சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்னும் தலைப்பில் விவிலியப் பிரதிகளை அச்சிட்டு வினியோகித்து வருகின்றது. இற்றைவரை 110 மொழிகளில் 3 கோடியே 40 லட்சம் பிரதிகளை இவ் அமைப்பு வெளியிட்டிரக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### உரோமில் ருமெனிய அருங்காட்சியகம்

திருப்பீட கலாச்சாரத்துறை, ருமேனிய கலாச்சார அவை அச்சகம் திருப்பீட ருமெனியத் தூதுவர் ஆகியோர் இணைந்து உரோமில் ருமெனியா கலை அருங்காட்சியகம் ஒன்றை திறந்திருக்கின்றனர்.

கிழக்கு மேற்கு கிறிஸ்தவத்திலுற்கிடையே ஓர் இணைக்கும் பாலமாக இவ் அருங்காட்சியகம் அமைந்திருக்கிறது.

### திருச்சபையின் கருதினால் இப்போது 155

156 ஆக இருந்த திருச்சபையின் கருதினால்களின் எ்ண்ணிக்கை அண்மையில் சிலிநாட்டு கருதினால் ராவூ சில்வா கென்றிக் (வயது 92) மரணத்தையடுத்து 155 ஆக குறைந்துள்ளது. கருதினால்களின் 80 வயதுக்குட்பட்டவர்களே திருத்தந்தையைத் தெரிவு செய்வதற்குரிய தகுதியுடையவர்கள். அவ்வாறு தகுதியுள்ள 80 வயதிற்குட்பட்ட கருதினால்கள் 113 பேர் தற்போது உள்ளனர்.

### பேராயருக்கு யூத ஸ்தாபனத்தின் விருது

ஜேர்மனியில் உள்ள யூத ஸ்தாபனமாகிய மாட்டீன் பூபர் நிறுவனத்தின் பூபர் றொசன்விக் விருது பேராயர் ஹென்றிக் முசின்ஸ்கி அவர்களுக்கு அளிக்கப்பட் விருக்கின்றது. இப்பேராயர் 10 ஆண்டு காலமாக போலாந்தின் கிறிஸ்தவர்-யூதர் உரையாடலுக்கான ஆணைக்குழுவுக்கு தலைமை தாங்கியிருக்கிறார். போலிஷ் - ஜேர்மன் - யூத மக்களிடையே உறவுகளை வளர்க்கும் பணிக்காகவே இவ்விருது அவருக்கு அளிக்கப்படுகிறது. இவ்விருதினைப் பெறும் முதல் போலாந்து நாட்டினரும் முதல் ஆயரும் இவரே ஆவார்.

பரிசுத்த பூமியில் மிகவும் பற்றுக் கொண்டவரான இவர் இஸ்ராயேலிலும், யோர்தானிலும் அகழ்வாராச்சியில் ஈடுபட்டிருந்த போதே யூத-கிறிஸ்தவ உரையாடலுக்கு அறிமுகமானார்.

### டனியூப் நதி மாசுபடும் அபாயம்

ஐரோப்பாவின் மிக நீளமான நதியாகிய டனியூப் மாசுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி ஆராய கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதா 1ஆம் பார்த்தொலோமியூ ஒரு புதுமையான கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தார். இவ் ஆய்வரங்குக்கு அவர் கிறிஸ்தவத் தலைவர்களையும் விஞ்ஞானிகளையும் அழைத்திருந்தார்.

இவர்கள் டனியூப் நதியில் பிரயாணம் செய்தவாறே இந்த ஆய்வினை நடத்துவார். பவேரியாவிலுள்ள பாஸோ என்னுமிடத்தில் ஜுன் 26ஆம் திகதி ஆரம்பித்த இப்பயணம் கருங்கடலில் முடிவடைந்தது. டனியூப் கரையிலுள்ள வியென்னா, பிராட்டிஸ்லாவா, புடபெஸ்ற், பெல்கிறேட் ஆகிய பிரதான நகரங்களை அவர்களது படகு கடந்து செல்லும்.

சூழலைப் பாதுகாப்பதில் விஞ்ஞானிகளையும் மதத் தலைவர்களையும் ஒன்று சேர்ப்பதன் மூலம் கிறிஸ்தவ சபைகள் மட்டுமல்லாந்த் யூதரும் முஸ்லீம்களும் கூட ஒன்றுபட்டு உழைக்கக் கூடிக்க அனைவருக்கும் பொதுவான ஓர் புதிய துறை உருவா[illegible]மன எதிர்பார்க்கப்படுகின்றது. படைப்பைப் பாதுகாப்டபதில் [illegible] கிறிஸ்தவர்களின் பொறுப்பைத் தூண்டி விடுவதே பிதாப்[illegible]தா பார்த்தலோமியூவின் நோக்கமாகும்.

## யோசவ் வாஸ் இளைஞர் மன்றம் புனித யாகப்பர் ஆலயம்

குருநகர், யோசவ் வாஸ் இளைஞர் மன்றம் 02.05.99 அன்று தனது புதிய செயற்குழுவைத் தெரிவுசெய்தது. அலுவலர்களும் ஆறு பிரிவுகளுக்குப் பொறுப்பான உறுப்பினர்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| தலைவர் | : ப. வ. பிரியாந்தன் |
| உபதலைவர் | : அ. ம. அமலதாசன் |
| செயலாளர் | : பே. றொசாறின் |
| உபசெயலாளர் | : வெ. யூடா சதீஸ்குமார் |
| பொருளாளர் | : அ. செல்வா |
| வழிபாடு | : ம. ஜெயந்தக்குமார் |
| கல்வி | : யே. பிரபா |
| கலை | : யே. பிரபா |
| இணைப்பொறுப்பு | : யூ. அஜித்குமார் |
| விளையாட்டு | : ஜெ. செல்வன் |
| தொடர்பு சா்தனமும் வெளியிடும் | : டெ. சே. சுவைனஸ் |
| சமூகசேவை | : கி. கைண்டோ |

தகவல் — டெ. சே. சுவைனஸ்

## மன்னிக்க மனமில்லையா?

மன்னிப்பு புதுமையான மாற்றத்தைச் செய்கின்றது. ஆபிரகாம் லிங்கனிடம் அவர் ஏன் தன் பகைவர்களை அழிக்கவில்லை என்று கேட்கப்பட்ட போது அவர் கூறியது: "என் பகைவர்களை என் நண்பர்களாக்குகின்றேன். அது பகைவர்களை அழிப்பதாகாதா?" நீங்கள் மன்னிக்கும் போது பிறரை மாற்றுகிறீகள். உங்களையும் மாற்றிக்கொள்கிறீர்கள். மனக்கசப்பு என்னும் சுமையிலிருந்து விடுபடுகிறீர்கள். குற்ற உணர்வு என்னும் பிணைப்பிலிருந்து பிறரை விடுவிக்கிறீர்கள். மன்னிப்புப் பெறவேண்டுமானால் நீங்கள் மன்னிக்கவும் வேண்டும். மன்னிக்க முடியாதவர்கள் தாமே கடந்து செல்லவேண்டிய ஒரு பாலத்தை உடைத்து விடுகிறார்கள். ஏனெனில் அனைவரும் மன்னிக்கப்படவேண்டும். மன்னிப்பு இன்றே தொடங்க வேண்டும். பின்போட்டால் மனப்புண் ஆழமாகும். பகைமையை இறுகப் பற்றிக் கொண்டால் மகிழ்ச்சி விலகிப்போகும். வாழ்வோ குறுகியது. காலம் விரைகிறது. இன்றே மன்னிப்பின் நாளாம்

ஆதாரம்
Catholic Messenger

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 * 08 * 1921



விண்ணில் 15 * 06 * 1998

திரு. பஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை
(போஸ்ற் மாஸ்ரர்)

"உயிரோடு இருக்கும்போது என்னிடம்
நம்பிக்கை கொள்ளும் எவரும்
என்றுமே சாகமாட்டார். . ." - இயேசு
(யோவான் 11:26)

செபம்:

அளவில்லா அன்பு கொண்ட இறைவா! உம்மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்து உம்மிடமே வந்துள்ள பஸ்ரியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளையுடைய வாழ்வுக்காகவும் பணிக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவரது குறைகுற்றங்களை மன்னித்து நற்செயல்களுக்கு மகிழ்வான நிலை வாழ்வை வழங்கியருளும். ஆமென்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வதிரி, புனித அந்தோனியார் ஆலயத்தில் 15.06.1999 (செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 (பு.நே) க்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நன்றி

இவரது பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

வதிரி,
கரவெட்டி

A/25/99

## ஓராண்டு நினைவலைகள்



ஜெபரெட்ணம் ஜொணி அல்பேட்சன்

அன்னை மடியில் 16.10.1997 — ஆண்டவன் அரவணைப்பில் 03.06.1998

ஆண்டொன்று ஆகியும்
ஆசைமகனே உன் நினைவு
அன்றலர்ந்த மலர் போல
இன்றுமிந்த மனங்களில் - நிழலாட
நீ பசுமையாய், பைத்தியமாய்
பகற்கன்வாய் போனதேனோ?

இவரது பிரிவால் வாடும்
மம்மி, அப்பா, அண்ணாமார்,
பேரன், பேத்திமார்

இல. 06, ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.

A/23/99

## விண்ணக வாழ்வில் ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி. பிரகாசம்
பஸ்தியாம்பிள்ளை

பேரப்பிள்ளைகளே
முதியோரின் முடியாம்
புதல்வருடைய
மகிமையோ அவர்கள்
தந்தையரேயாம்.
(பழமொழியாகமம். 17:6)

இவரின் பிரிவால் துயருறும்
மகள்.சிஸ்ரர்தார்சில்லா(H.F.C),
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

தபாற் கந்தோரடி
நெல்லியடி, கரவெட்டி.

## 4ஆம் வருட நினைவு அஞ்சலி

08-06-1995



உயர்திரு. பிரான்சிஸ்
நீக்கிலஸ்
(உதவி அரசாங்க அதிபர்
– நெடுந்தீவு)

"உயிர்ப்பும் உயிரும்
நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்"
(யோவான். 11:25)

நீதியற்ற இவ்வுலகிலே,
அரக்கத்தனமாக
உயிர் நீத்த
உங்கள் மரணத்தாலே
- நாம்
நிலைகுலைந்து;
நிம்மதியிழந்தோம் ஐயா!
இறைவனின் அடியில்
- நீர்
இன்பசாந்தி பெற
நிதமும், நிமலனை
வேண்டுகின்றோம்.

இவரின் அன்பால் வாடும்
மனைவி - மேரி றிற்றா
மகன் - ஒஸ்கார்,
உற்றார், உறவினர்
நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலையில் இறைபணியாளனுக்கு வெள்ளிவிழா

இளவாலை மக்களின் இதயத்தில் நிறைந்தவரும், புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபரும், இளவாலை மறைக்கோட்ட முதல்வருமாகிய அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா 24.04.99 அன்று இளவாலையில் கொண்டாடப்பட்டது.

பல குருக்கள், கன்னியர், பொதுமக்கள், ஹென்றியரசர் கல்லூரி குடும்பத்தினர் அணிதிரள புனித அன்னாள் ஆலயத்தில் விழா நாயகர் நன்றித் திருப்பலியை நிறைவேற்றினார். தொடர்ந்து ஹென்றியரசர் கல்லூரி வளாகத்தில் யூபிலி நாயகருக்கு பாராட்டு வைபவம் இடம்பெற்றது. யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை J. P. E. செல்வராஜா அவர்களும், மற்றும் நல்லை ஆதீன முதல்வர், தென்னிந்திய திருச்சபையின் பிரதிநிதி, நற்கருணை சபை முதல்வர், யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர், வலிகாம வலய் பிரதிக் கல்விப் பணிப்பாளர், பழைய மாணவர் சங்க பிரதி நிதிகள் ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

யூபிலி நாயகரின் பணியை விதந்துரைக்கையில் அனைவரும் அவரை "விசுவாசம் மிக்க ஆன்மீகவாதி, ஆழம் மிகுந்த அறிவாளன் ஆளுமை மிக்க தலைவன், பணிவின் பணியாளன், எதிர்காலத்தில் நற்சமூகத்தைப் படைப்பதில் முன்னின்று உழைத்துவரும் உத்தமன்" எனப் பாராட்டினர். கவிமணி அடைக்கலமுத்து அவர்கள் விழா நாயகரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அவரது பணி வாழ்வின் யதார்த்தங்களை வெளிக்கொணரும் வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

தகவல் .S. வுனோறன்ஸ்


எமது விற்பனை
நிலையத்தில்...

- வாழ்த்து மடல்கள்,
- 'மடுமாதா' ஸ்ரிக்கர்கள்,
- செபமாலை,
- வரவணிக்கங்கள்,
- செபமாலைத் தியானம்,
- புனிதர்களின் பிரார்த்தனைப் புத்தகங்கள்

ஆகியன விற்பனைக்குண்டு.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்.


# அகவொளியில் யூபிலி விழா

அகவொளி இயக்குனர் அருட்திரு. S.J.இராஜநாயகம் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் 25 வது வருட நிறைவின் ஜுபிலி விழா கிறிஸ்தவ குடும்ப இயக்கத்தாலும் அகவொளி பணியாளர்களாலும் ஒன்று சேர்ந்து 09.05.99 ஞாயிற்றுக்கிழமை நன்றியோடு நினைவுகூரப்பட்டது: விழா நாயகர் மங்கள விளக்கேற்ற விழா ஆரம்பமானது ஜுபிலி நாயகர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, மன மகிழ்வோடு இறை நன்றி கூறி திருப்பலி திருப்பலி ஒப்புக் கொடுத்தார். அருட்கலாநிதி S. டேமியன் O. M. I. அடிகளும் அருட்திரு எட்வின் வசந்தராஜா O. M. I. அடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகள் ஜுபிலி நாயகரின் 25 வருடப் பணிவாழ்வைப் பற்றி மறையுரையில் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து ஒன்று கூடுதலும் மதிய போசனமும் இடம்பெற்றன.

தகவல் R. A. அமலரட்ணம்
(பேராலய, நிருபர்)

## உ ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ இளைஞர்களின் ஆளுமை

எமக்குள்ளே புதைந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணரக் கூடியதாகவும், 21ம் நூற்றாண்டின் சமூக, சமய, விஞ்ஞான சவால்களுக்கு முகம் கொடுத்து சிறந்த ஆளுமையுடன் செயற்படவேண்டும் என்பதை இன்றைய இளைஞருக்கு உணர்த்தும் ஒரு பயனுள்ள நிகழ்வாகவும் இத் தியானம் அமைந்தது.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய இளைஞர் உருவாக்கல் அமைப்பின் தவக்காலத் தியான வழிபாட்டில் பங்கு பற்றிய இளைஞர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர். யூலனூர் புனித ஹென்றியரசர் ஆலயத்தில் பங்குனி மாதம் 14ம் திகதியன்று இத் தியானம் நடைபெற்றது. அருட்தந்தை எட்வின் வசந்தராஜா அவர்களால் வழிநடத்தப்பட்ட இத் தியானத்தில் முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர். இத்தியானத்தின் கருப்பொருள் 21ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ இளைஞர்களின் ஆளுமை என்பதாகும். குழு நிலை ஆராய்வு, பகிர்வு என்பவற்றைத் தொடர்ந்து திருப்பலியுடன் தியானம் நிறைவடைந்தது.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை நிருபர்.

# தாளையடிப் பங்கில் மகா ஞானொடுக்கம்

தாளையடிப் பங்கிலுள்ள புனித அந்தோனியார் ஆலயம், செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயம், குடாரப்பு கார்மேல் ஆலயம், நாகர்கோவில் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், நெல்லியான் புனித யூதாததேயு ஆலயம் ஆகியவற்றை சேர்ந்த மக்களுக்கான மகா ஞானொடுக்கம் சித்திரை 11ம் திகதி ஆரம்பித்து மூன்று வாரங்களாக நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு பிரான்சிஸ் அவர்களுடன் அருட் தந்தையர்கள் றெக்ஸ் கொண்ஸ்ரன்ரைன், பீற்றர், யோகராஜா ஆகியோர் மக்களை வழிநடத்தினர். அருட் சகோதரர்களின் துணையுடன் போதகர்கள் வீடுகளைத் தரிசித்தனர்.

ஆரம்ப பணியாக ஞானொடுக்க பாடல்கள் பயிற்றப்பட்டன. பணிக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. வலய ரீதியாக செபமாலை, அன்பிய வழிபாடுகள், திருப்பலிகள் நிகழ்த்தப்பட்டன.

"பொது விவிலிய அறிமுகம்" என்ற தலைப்பில் கருத்துரைகளும் "வாழ்வும் வழிபாடும" என்ற பொருளில் உரைகளும் திருவழிபாடுகளும் நடத்தப்பட்டன.

இளைஞர் யுவதிகளுக்கான உளவியல் கருத்தரங்கு அருட்தந்தை போல் நட்சத்திரம் அவர்களாலும், பெற்றோருக்கான கருத்தரங்கு அருட்தந்தை S. J. இராஜநாயகம் குழுவினராலும் நடத்தப்பட்டன.

அன்னையின் பக்தியை வளர்க்கு முகமாக செபமாலைப் பேரணியொன்றும் இடம்பெற்றது.

இறுதி நிகழ்வாக வைகாசி 4ம் திகதி திருவழிபாடுகளும், அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஞானொடுக்கத்தின் முடிவில் மக்களிடத்தில் பல மாற்றங்களை உணரக் கூடியதாக இருந்தது. முன்பு தட்டிக் கழிக்கவும், விமர்சிக்கவும் தலைப்பட்டவர்கள் தமது மனமாற்றத்தை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்று ஒன்று கூடி அன்பிய வழிபாடுகள், செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

## மங்கோலியாவில் திருச்சபை வேரூன்றுகிறது!

மங்கோலியாவிலுள்ள உலான் பட்டோர் என்னுமிடத்தில் பிலிப்பைனைச் சேர்ந்த அருட்சகோதரர் பிலிப்போர்லா என்பவர் உயிர்த்த ஞாயிறன்று தனது நித்தியவாக்குத்தத்தத்தை செய்துகொண்டார்.

1992ல் தான் கிறிஸ்தவ மறைபோதகர் மங்கோலியாவுக்குள் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னரே அங்கு நற்செய்தி பரப்பப்படலாயிற்று.

CICM குருக்கள் ஓர் ஆலயத்தை அங்கு நிறுவி படிப்படியாக மக்களைக் கவர்ந்து வருகின்றனர். தற்போது 87 மங்கோலியரே திருச்சபையில் சேர்ந்துள்ளனர். ஆனால் வந்து பார்த்துப் போவதற்கு வருபவர் அநேகர். தற்போது 17 பிறநாட்டு மிஷனறிகள் மங்கோலியாவில் பணிபுரிகின்றனர். இவர்களுள் 7 குருக்களும் மூன்று சபைகளைச் சேர்ந்த 10 அருட் கன்னியரும் அடங்குவர்.

# யாழ் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் 18வது ஆண்டு விழா

யாழ் புனித மரியாள் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் 18வது ஆண்டு நிறைவு விழா 23.5.99 அன்று யாழ் ஆயரின் கூட்டு சிறப்புத் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. அன்று காலை திருப்பலி ஒப்புக் கொடுத்த யாழ் ஆயரோடு பேராலய பங்குத் தந்தை அருட்திரு A.C. கிறிஸ்தோப்பர் அடிகளும் இளைஞர் உருவாக்கல் இயக்கத் தின் இயக்குனர் அருட்திரு எமில் போல் அடிகளும் இணைந்து வர இளைஞர் உருவாக்கல் இயக்க அங்கத்தவர் அனைவரும் ஒளியேந்தி பீடம்நோக்கி பவனியாக வந்தது சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

அன்று காலை 10 மணியளவில் பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் இளைஞர் உருவாக்கல் இயக்கத்துடன் சினேக பூர்வ மென்பந்து துடுப்பாட்டம் இடம்பெற்றது.

மாலை 4 மணியளவில் புனித ஞானப் பிரகாசியார் மண்டபத்தில் இளைஞர் உருவாக்கல் இயக்கத் தலைவர் செல்வன் பி. றெ. நியூட்டன் தலைமையில் ஒன்றுகூடல் இடம்பெற்றது. இயக்குனர் அருட்திரு எமில் போல் அடிகள் "இளைஞர்கள் திருச்சபையின் பெரும் சொத்து. அவர்கள் பெறுமதி மிக்கவர்கள்" எனும் திருத்தந்தையின் கூற்றை முன் வைத்து ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து கவிதை, பாடல்கள், தனிநடிப்பு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. பங்குத்தந்தை அருட்திரு A. C. கிறிஸ்தோப்பர் அடிகள் உரையாற்றுகையில் "எமது பங்கில் இளைஞர்களின் பணி மகத்தானது என்றும் அமரர் அருட்திரு ஜெபநேசன் அடிகள் இவ்வியக்கத்தை வளர்த்தெடுத்தார் என்றும் பதினெட்டு ஆண்டுகள் அல்ல பல்லாயிரம் ஆண்டு பணிபுரிய வேண்டும் என்று கேட்டு இளைஞர்கள் அனைவரும் இவ்வியக்கத்தில் இணைந்து திருச்சபைக்கும், சமூகத்துக்கும் பணியாற்றுவதோடு தாமும் பயன்பெற வேண்டும் என்று அழைப்புவிடுத்தார். இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு இயக்குனரும் பங்குத் தந்தையும் பரிசுகள் வழங்கினர். தொடர்ந்து இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் செயலாளர் A.M. லொயலாவின் நன்றியுரையும் நாடகமும் இடம்பெற்றது. ஈற்றில் புகழ் பாடலோடு விழா நிறைவெய்தியது.

இ. அ. அமலரட்ணம்
(பேராலய நிருபர்)

## கரம்பன் வேளாங்கன்னி மாதா திருவிழா

மேற்படி விழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் மே மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்று திருவிழாத் திருப்பலி 29.05.99 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது.

## மயிலிட்டி காணிக்கை மாதா திருவிழா

"காணிக்கைத் தாயே நாம் எமது சொந்த மண்ணில் மீண்டும் குடியேறி வாழத் துணைபுரியும் அம்மா" அம்மா என்ற பெருமூச்சு ஒலி மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் எதிரொலித்தது. 1990 ஆம் ஆண்டு மீண்டும் ஈழப்போர் வெடித்த போது தமது சொந்த மண்ணைவிட்டு இடம்பெயர்ந்[illegible] வடமாகாணத்தின் ஏனை[illegible] பகுதிகளில் அகதிகளா[illegible] வாழ்ந்த மயிலிட்டிப் பா[illegible] மக்கள் 1999 ஆம் ஆ[illegible] மாசி மாதம் 28ஆம் திக[illegible] மீண்டும் தமது சொந்த மண்ணுக்குச் சென்று புனித காணிக்கை மாதா திருவிழாவைக் கொண்டாடினார்கள். யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை செல்வராஜா அடிகளார் தலைமையில் அருட்தந்தையர்கள் யஸ்ரின், அன்ரனிபாலா ஆகியோர் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். தமது ஆலய நிலைமையும் தாம் வணங்கி வந்த காணிக்கை அன்னையின் சுரூபம் இல்லாத துயரமும் மக்கள் மனதைவாட்ட துன்பம் கலந்த மகிழ்ச்சியுடன் விழாவில் கலந்து கொண்டனர்.

தகவல்
இ. மரியதாஸ்
(மயிலிட்டி நிருபர்)

# இளவாலையில் விவிலியக் கண்காட்சியும் கருத்தரங்கும்

இளமை குன்றாதிலங்கும் இளவாலையம் பதியில் கடந்த 19.03.99 முதல் 21.03.99 வரை விவிலிய வாரத்தையொட்டிய கருத்தரங்குகளும் கண்காட்சியும் அருட்திரு றெக்ஸ் கொண்சன்ரைன் அவர்களின் நெறிப்படுத்தலில் யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களினால் நடாத்தப்பட்டன.

இந் நிகழ்வுகளைத் திறம்பட நடாத்த இளவாலை புனித யாகப்பர் பங்கினையும், இளவாலை புனித யூதாததேயு பங்கினையும் அவர்கள் தெரிவு செய்து ஆரம்பநாள் நிகழ்வாக புனித யாகப்பர் பங்கில் விவிலிய அரங்கேற்றமும், தெருப் பிரசங்கமும் புனித யூதாததேயு பங்கில் தெருப்பிரசங்கமும் இடம்பெற்றன. இரண்டாவது நாள் நிகழ்வாக இரு பங்கிலும் கருத்தரங்குகளும், வேதாகமத்தையொட்டிய பல போட்டிகளும் நடாத்தப்பட்டன. அதேவேளை இளவாலை கன்னியர் மடம் ம. வி. இல் வேதாகமக் கண்காட்சியும் வீடியோ நிழல் படக்காட்சிகளும் இடம்பெற்றன.

இறுதி நாளாகிய ஞாயிறு காலை பெற்றோர்களுக்கான கருத்தரங்குகளும் கண்காட்சித் தொடரும் நடாத்தப்பட்டதுடன் மாலை 5.30 மணிக்கு புனித யூதாததேயு ஆலயத்தில் விசேட திருப்பலியும், அதனராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். கலை நிகழ்ச்சிகளை புனித யாகப்பர் பங்கு, புனித யூதாததேயு பங்கு சிறுவர் இளைஞர் யுவதிகளும், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களும் இணைந்து நடாத்தினர். பிரதம விருந்தினர் தமது உரையில் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இவ் விறுதி நிகழ்வுகளுக்கு இளவாலை பங்குத்தந்தை அருள்திரு G. T. அன்ரனி பாலா அவர்கள் பிரதம விருந்தி "இவ் வாறான வேதாகம வார நிகழ்வுகள் கிறிஸ்தவ மக்களின் வேதாகம அறிவையும், விசுவாச வாழ்வையும் ஆழப் படுத்த உறுதுணையாக அமைகின்றன" என்று குறிப்பிட்டார். இறுதியாக வேதாகமம் சம்பந்தமாக நடைபெற்ற பல போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தகவல்: S.M.வுனோறன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197